# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 17
ஏப்ரல் 2004



வெளியிடுவோர்


**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. தமிழ்நாடு. இந்தியா

✆ 04257 - 230030, 230382, Cell : 98427 - 30382

E-mail : kangayamocfc@eth.net

# BIBLE MEDITATION




## ஆசானின் அறிவுரையிலே

1. ஆசிரியர் உரை.................................... 1
2. ஏலகிரிக்கு வாருங்கள்.......................... 9
3. கிறிஸ்துவின் இரத்தத்தில்.................... 10
4. பெண்கள் பகுதி................................ 14
5. வாலிபர் பகுதி.................................. 17
6. சிறுவர் பகுதி.................................... 21
7. எபிரெயர்.......................................... 23
8. விசுவாசத்தின் அடிப்படைகள்........... 24
9. இரண்டு ஆதாம்கள்............................ 29

# THIRUMARAI AASAAN

*Published by church of christ*

Editor
**S. Rajanayagam**

Honorary Editor
**J.C. Choate**

**Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.**

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 17 April - 2004 Issue - 4**


**ஆசிரியர் உரை**

# தூக்கு நூல் தேவன்

கிறிஸ்துவின் சபை சார்பாக எங்களால் நடத்தப்பட்டுவரும் "*எக்லீசியா வேதாகமக் கல்லூரி*" க்கு அழகிய வடிவம் கொண்ட ஒரு புதிய கட்டிடத்தை பரலோகத்தின் தேவன் தந்தார். தேவன் எங்களுக்குத் தந்ததை, அவருடைய நாம மகிமைக்காக அது பயன்பட வேண்டுமென்று விரும்பி கடந்த *மார்ச் மாதம் 15-ம் தேதி* மிகுந்த நன்றிகளோடும், துதிகளோடும் அவருக்கு ஒப்புக்கொடுத்தோம். அந்தக் கட்டிடத்தின் கட்டுமானப் பணியின் போது, பெரும்பாலும் நான் கூடவே இருந்ததால், கட்டிடம் கட்டு கிறவர்கள், கட்டுவதற்குக் கையாளும் முறைகளைப் பக்கத்திலிருந்து கவனிக்க நேர்ந்தது. அப்படிக் கவனிக்கையில், அவர்கள் சுவர் எழுப்பும்போது, தூக்குநூல் அல்லது தூக்குண்டு என்றழைக்கப்படும் ஒரு வித சாதனத்தை ஒவ்வொரு கட்டத்திலும் தவறாது பயன்படுத் தினதை நான் கண்டேன். அத்தூக்குநூலின் கீழ்ப்பகுதியில் கூர்மையான முனைகொண்ட ஓர் இரும்புக்குண்டு இருக்கும். அதைத் தூக்கிப் பிடிக்கும்போது, புவிஈர்ப்பு விசையின் காரணமாக அந்த நூல் நேராக நிற்கிறது. கட்டப்படும் சுவர் செங்குத்தாகவும், சரியாகவும் இருக்கிறதா என்பதை அந்நூலைக் கொண்டு பரிசோதித்துப் பார்த்தார்கள்.

அவர்கள் அப்படிச் செய்தது, ஆமோஸ் தீர்க்கனுடைய சில வசனங்களை எனக்கு நினைவுக்குக் கொண்டு வந்தது. அவ்வசனங்கள் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்ட ஐந்து தரிசனங்களில், மூன்றாவது தரிசனத்தின் ஒரு பகுதி. இஸ்ரவேலின் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருமென்பதை உணர்த்தும்படியாக அத்தரிசனங்கள் ஆமோசுக்குக்

காண்பிக்கப்பட்டது. "பின்பு அவர் எனக்குக் காண்பித்ததாவது ! இதோ, தூக்குநூல் பிரமாணத்தினால் கட்டப்பட்ட ஒரு மதிலின்மேல் நின்றார் ; அவர் கையில் தூக்குநூல் இருந்தது. கர்த்தர் என்னை நோக்கி : ஆமோசே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்றார். தூக்கு நூலைக் காண்கிறேன் என்றேன் ; அப்பொழுது ஆண்டவர் : இதோ, (எரே 32:18) இஸ்ரவேலென்னும் என் ஜனத்தின் நடுவே தூக்கு நூலை விடுவேன். இனி அவர்களை மன்னிக்கமாட்டேன். ஈசாக்கின் மேடைகளைப் பாழும், இஸ்ரவேலின் பரிசுத்த ஸ்தலங்கள் அவாந்தரமுமாக்கப்படும். நான் யெரொபெயாம் வீட்டாருக்கு விரோதமாய் பட்டயத்தோடே எழும்பி வருவேன் என்றார். (7:7-9)"

இவ்வசனங்களைக் கவனித்தால் நம்முடைய தேவனை நாம் தூக்கு நூலின் தேவன் என்றும் தாராளமாக அழைக்கலாம் என்றே தெரிகிறது. "யெகோவா" என்னும் நாமமுள்ள அவர், அவருடைய தன்மைகள் மற்றும் செயல்பாட்டினடிப்படையில் விதவிதமாக வேதாகமத்தின் பக்கங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளார். ஆம், அவர் "உன்னதமான தேவன்" (ஆதி 14:18), "சதா காலமுமுள்ள தேவன்" (ஆதி 21:33), "மகத்துவமும் வல்லமையுள்ள தேவன்" (எரே 32:18) "ஞானமுள்ளதேவன்" (II யோ-1:17) "சோதிகளின் தேவன்" (யாக் 1:17), "சேனைகளின் தேவன்" (II சாமு 5:10) என்றும், இப்படி இன்னும் பல வகையிலும் சொல்லப்பட்டுள்ளார். இந்த வரிசையில், அவர் "தூக்கு நூல்" தேவன் என்பதையும் நாம் சேர்த்துவிடலாம்.

இங்கே, இந்த வசனங்களை நாம் கவனித்தால், இஸ்ரவேல் என்னும் தேசம், எல்லா வகையிலும், குறிப்பாக ஆன்மீக காரியங்களில் சரியாகக் கட்டப்பட வேண்டுமென்று எண்ணி, தேவன் நியாயப் பிரமாணத்தைக் கொடுத்தார். அப்படி நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொண்ட அவர்கள், தங்கள் ஆன்மீக வாழ்க்கையை அதனடிப் படையில் கட்டியிருக்கிறார்களா என்பதைச் சரிபார்க்க தேவன் விரும்பினர். அதுமாத்திரமல்ல, தன்னுடைய தூக்குநூலாகிய நியாயப் பிரமாணத்திற்கு அது ஒத்துவரவில்லையென்றால் அதாவது கோணலாகவோ, அல்லது மாறுபாடாகவே இருந்தால், அதற்கேற்றாற்போல் தன்னுடைய நியாயத்தீர்ப்பு இருக்குமென்றும் தெளிவுபடுத்துகிறார். ஆன்மீக ரீதியாகக் கட்டப்படும் எதுவுமே, சரியாகக் கட்டப்பட வேண்டுமென்றே வேதாகமம் எப்பொழுதும் வலியுறுத்தி வந்திருக்கிறது (மத் 7:24-27)

சரி, ஆமோஸ் தீர்க்கனுடைய கூற்றுப்படி, நம்முடைய தேவன் தூக்குநூல் தேவனாக இருப்பது, நமக்கு எந்த வகையான பாடங்களைக்

கற்றுக் கொடுக்கிறதென்று இப்பொழுது கவனித்து, அதன்மூலம் நாம் பயனடைய முயற்சிப்போம்.

## I. கட்டப்படுவது தூக்கு நூலின் படியாகவே கட்டவேண்டும்

நம்முடைய தேவன், தூக்குநூலின் தேவனாக இருக்கிறார் என்பதிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற முதல் பாடம், ஆன்மீக காரியங்களில் கட்டப்படுவது எதுவாக இருந்தாலும், அது தூக்குநூலின்படியாகவே கட்டப்பட வேண்டுமென்பது.

நாம் ஒவ்வொருவரும் நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில், கிறிஸ்த ஜீவியத்திற்கான ஒரு சுவரை அல்லது பக்தி வாழ்வுக்கான ஒரு சுவரை அன்றாடம் எழுப்பிக் கொண்டிருக்கிறோம். இந்த சுவர், நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்திற்காக, நம்முடைய பக்தி வாழ்வுக்காக நாம் அன்றாடம் செய்கின்ற ஒவ்வொரு செயலின் மூலமும் எழுப்பப்படுகிறது. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இந்தச்சுவர் நம்முடைய செய்கையினடிப்படையில் மேலே எழும்பிக் கொண்டேயிருக்கிறது.

இச்சுவரை எழுப்புவதற்கு தேவனுடைய பிரமாணம் என்னும் தூக்குநூலை நாம் பயன்படுத்த வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். அதற்காகவே தன்னுடைய நீதிப்பிரமாணமாகிய நியாயப்பிரமாணத்தை பழைய ஏற்பாட்டின் காலத்திலும், கிறிஸ்துவின் உபதேசங்களடங்கிய புதிய ஏற்பாட்டை நம்முடைய நாட்களிலும் தந்துள்ளார். அப்போஸ்தலன் பவுல் தீமோத்தேயுவுக்குச் சொல்லும்போது “வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத்தகுதி உள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது” என்கிறார். (II தீமோ 3:16,17) ஆனாலும், அநேகர் இந்த வேதவாக்கியங்களின டிப்படையில் தங்கள் சுவரை எழுப்பாமல், தங்கள் மனம்போன போக்கில் சுவரை எழுப்பிக் கொண்டிருக்கின்றனர். மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு, அதின் முடிவோ மரணவழிகள் என்று (நீதி 14:12) தேவன் ஞானியைக் கொண்டு சொல்லிருக்கிற படியால், நாம் மனம் போன போக்கில் ஆன்மீக வாழ்க்கைக்கான சுவரை எழுப்பக்கூடாது.

இன்னும் சிலபேர், தங்களுக்குத் தெரிந்ததே சரி என்றும், தங்களுக்குப் போதிக்கப்பட்டதே உண்மை என்றும் எண்ணி அதனடிப்படையில்

தங்கள் பக்திக்கான சுவரை எழுப்புகின்றனர். மேலும் பலர், தங்கள் ஆன்மீக வாழ்வுக்கான சுவரை பெரும்பான்மையானவர்களைப் பின்பற்றுவதன் மூலமாக எழுப்புகின்றனர். தாங்கள் செய்வது சத்தியத்தின்படியானதா அல்லது அசத்தியத்தின்படியானதா என்றும், நீதியின்படியானதா அல்லது அநீதியின்படியானதா என்றும், வேதவசனங்களின் படியானதா அல்லது வசனத்திற்குப் புறம்பானதா என்றெல்லாம் எண்ணாமல், திரளான மக்களின் செய்கையைப் பின்பற்றுகின்றனர். ஆனால், வேதாகமமே தீமைசெய்யத் திரளான மக்களைப் பின்பற்றாதிருங்கள் என்றே சொல்லுகிறது (யாத் 23:2) நீதியின் குரல்வளையை நெஞ்சார நெறித்த பிலாத்துவுக்கு முன்பாக இயேசு விசாரணைக்காக நின்றபோது பெரும்பான்மையானவர்கள் என்ன செய்தார்கள் ? ஒரு பாவமும் அறியாத இயேசுவைச் சிலுவையிலறையும் என்றும், பரபாசை விடுதலை செய்யும் என்றுதானே கூச்சலிட்டார்கள் (லூக்கா 23:18). பெரும்பான்மையானவர்கள் நீதிக்கு தங்களை ஒப்புக்கொத்தார்கள் என்று வேதாகமம் எங்கே சொல்லுகிறது ? எப்பொழுது பெரும்பான்மையானவர்கள் தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து அவருக்குப் பிரியமாய் வாழ்ந்திருக்கிறார்கள்? சொல்லுங்கள்.

பெருவெள்ள காலத்தில் வாழ்ந்த நோவா என்ற தேவ மனிதன், தேவகாரியத்தில் ஒருவன் பெரும்பான்மை பார்க்கக்கூடாது என்பதற்கு மிகச்சிறந்த உதாரணமாகத் திகழ்கிறான். அவனுடைய நாட்களில், பூமியில் அக்கிரமம் பெருகி மனிதனுடைய இருதயத்து நினைவுகளின் தோற்றம் நித்தமும் பொல்லாததாயிருந்து அவன் அவைகளில் சிக்கிக்கொள்ளாமல் நீதிமானாகவும், உத்தமனாகவும் வாழ்ந்துள்ளான். (ஆதி 6:5-9). நோவா தேவனால் நீதிமான் என்றும், உத்தமன் என்றும் அழைக்கப்பட்டதற்கான காரணங்களில் ஒன்று, அவன் பெரும்பான்மையோர் என்ன செய்கிறார்கள் என்று பார்க்காமல், தேவன் தனக்கு இட்ட கட்டளைகளின்படியெல்லாம் செய்து முடித்ததே (ஆதி 6:22) தேவகட்டளைக்குக் கீழ்ப்படிந்தபடியால்தான், அவனுடைய நீதி தூக்குநூலின்படியாக இருந்தது. அதற்கு தேவ அங்கீகாரமும் கிடைத்தது.

அருமையானவர்களே, நம்முடைய ஆன்மீக வாழ்க்கையின் சுவரை நாம் எப்படி எழுப்பிக் கொண்டிருக்கிறோம் ? எதனடிப்படையில் கட்டிக்கொண்டிருக்கிறோம் ? "ஒருவன் போதித்தால், தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்க வேண்டும்" என்று (I பேது 4:11) சொல்லியிருக்கிறபடியால், ஒருவன் வாழ்வதும் தேவனுடைய வாக்கியங்களின் படியாகத்தானே வாழ வேண்டும். அதுதானே சரியாக இருக்கும்.

அப்படியானால், நம்முடைய வாழ்க்கை எப்படியிருக்கிறது ? தூக்கு நூலின் தேவன், நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை என்னும் சுவர் மீது நின்று, தூக்கு நூலை விடுவேன் என்று சொல்லியிக்கிறாரே, நாம் அச்சோதனைக்கு ஆயத்தமா ? ஒருவேளை நாம் ஆயத்தமில்லையானால், இன்றே ஆயத்தமாவோம்.

## II. கட்டப்படுவது ஒவ்வொரு கட்டத்திலும் சரிபார்க்கப்பட வேண்டும்.

தூக்கு நூல் தேவனிடமிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற இரண்டாவது பாடம், நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் நாம் எழுப்பும் சுவரை, ஒவ்வொரு கட்டத்திலும் தவறாமல் சரிபார்த்துக்கொள்ள வேண்டுமென்பது.

கட்டிடவேலை செய்யும் ஒரு கொத்தனாரோ அல்லது ஒரு மேஸ்திரியோ கட்டிட வேலை முடியும் வரை, தூக்கு நூலையே பயன்படுத்தாமல் கட்டிக்கொண்டிருந்தால், அக்கட்டிடம் எப்படியிருக்கு மென்று எண்ணிப்பாருங்கள். கண்டிப்பாக அது இருக்க வேண்டிய பிரகாரமாகவும், மற்றவர்களின் பாராட்டுக்கு உகந்ததாகவும் இருக்காது. இன்னும், சொல்லப்போனால் அது ஒரு முட்டாள்தனமான செயலாகவே இருக்கும். அதுபோல் தான், அவ்வப்போது தூக்கு நூலாகிய வேதவசனங்களின்படியாகச் சரிபார்க்கப்படாத கிறிஸ்தவ வாழ்வும், அதன் முடிவும் இருக்கும்.

வேத வசனங்கள், நாம் நம்மை சோதித்தறிகிறவர்களாக இருக்க வேண்டுமென்றே வலியுறுத்துகிறது. அப்போஸ்தலன் பவுல், கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள். "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்தறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப்பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா ? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்" என்கிறார். (II கொரி 13:5) இயேசு, ஒருவனுக்குள் இருக்கிறாரா இல்லையா என்பதை சோதனையின் மூலம் தான் அறியமுடியும் என்று மிக அழுத்தமாகக் கூறியுள்ளார். அப்படியானால் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பக்திக்குண்டான காரியங்களை, அதாவது நம்முடைய விசுவாசம், நம்முடைய மனந்திரும்புதல், நம்முடைய அறிக்கை, நம்முடைய ஞானஸ்நானம், நம்முடைய இரட்சிப்பு, நாம் சார்ந்திருக்கும் சபை, அந்த சபை தரித்திருக்கும் பெயர், இன்னும் நம்முடைய ஆராதனைமுறைக்குண்டான பாடல், ஜெபம், காணிக்கை கொடுத்தல், கர்த்தரின் பந்தியில் பங்குபெறுதல் இவைகளனைத்தும் கிறிஸ்துவின்

உபதேசங்களினடிப்படையில் இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்கிறவர்களாக இருக்கிறோமா ?

இன்னும், அப்போஸ்தலன் பவுல், தெசலோனியருக்குச் சொல்லும்போது, "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்"என்கிறார். (I தெச 5:21) ஆம், நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் நலமானதைப் பிடித்துக்கொள்வது அவசியமானதாயிருக்கிறது நலமானதைப் பிடித்துக் கொள்ளுகிறவர்களாயிருந்தால் தான் நாம் நற்குண சாலிகளாயிருக்க முடியும். இந்த அழகான வசனத்தைத் தொடர்ந்து, தேவன் கொடுக்கும் அடுத்த புத்திமதியையும் நாம் கவனிக்கத் தவறிவிடக்கூடாது. அது, "பொல்லாங்காய்த் தோன்றுகின்ற எல்லாவற்றையும் விட்டுவிலகுங்கள்" என்பது (I தெச 5:22) பொல்லாங்கை விட்டு விலகுங்கள் என்று சொல்லாமல், அதற்கும் ஒரு படிமேலே சென்று, **"பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்"** என்றே கூறியுள்ளார். இந்த இரண்டு வசனங்களும், இரண்டு முக்கியமான காரியங்களை நமக்கு சொல்லுகிறது. முதலாவது, **சோதித்தல்,** இரண்டாவது **விட்டுவிலகல்.** வேத வசனங்களினடிப்படையில், சோதித்தலில்லாத கிறிஸ்தவ வாழ்க்கை எப்படி பயனற்றதோ, அதேபோல்தான், சோதித்தலுக்குப் பின் விட்டுவிலக வேண்டியவற்றை விட்டு விலகாத பக்தி வாழ்க்கையும் பயனற்றது. இந்த இரண்டுமே, தேவ கட்டளையை மீறுகிற பாவச் செயலே. இக்கருத்தில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

ஆகையால், பிரியமானவர்களே, நம்முடைய ஆன்மீக வாழ்க்கையை, நம்முடைய விசுவாச வாழ்க்கையை நாம் எவ்விதம் கட்டிக்கொண்டுள்ளோம் ? நாம் நம்முடைய அன்றாட நடக்கையால் எழும்பும் பக்திக்கான சுவரை, வேத வசனங்களைக் கொண்டு அடிக்கடி சோதித்துப் பார்க்கிறவர்களாக உள்ளோமா ? ஒருவேளை, நாம் நம்மைச் சோதிக்கத் தவறினாலும், நம்முடைய **தூக்குநூல் தேவன்** நம்மைச் சோதிப்பார். நம்முடைய நித்தியம் அச்சோதனையினடிப்படையில் தான் நிர்ணயிக்கப்படப்போகிறது. இவ்வுண்மையை நாம் மறந்துவிடாமல், செய்ய வேண்டியதைச் செய்து அதுவும் உடனடியாகச் செய்து, நித்தியத்தை தேவாதி தேவனோடு கழிக்கத்தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுப்போம்.

## III. கட்டப்படுவது எப்படியிருந்தாலும், அதற்கான நியாயத்தீர்ப்பு உண்டு :

தூக்கு நூல் தேவனிடமிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற அடுத்த பாடம், நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் நாம் கட்டுவது எதுவாக இருந்தாலும், அது ஒரு நாளில் நியாயந்தீர்க்கப்படும் என்பது.

வேதாகமத்தில், தூக்குநூல், நியாயத்தீர்ப்பிற்கான அடையாள மாகவே சொல்லப்பட்டிருக்கிறது. பரலோகத்தின் தேவன், ஏசாயா தீர்க்கனைக் கொண்டு சொல்லுகிறதையும் கவனியுங்கள், "ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது. இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன். அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப் பட்டதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும் விசுவாசிக்கிறவன் பதறான். நான் நியாயத்தை **நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன்** ..." (ஏச 28:16, 17) என்று ஆமோஸ் தீர்க்கனைப்போலவே, ஏசாயா தீர்க்கனும் சொல்லியுள்ளார். ஆகவே, தூக்குநூல் தேவன், ஒரு நாளில் நியாயந் தீர்க்கப் போகிறார். அந்த நியாயத்தீர்ப்புக்கு எந்தவொரு மனிதனும் தப்பித்துக்கொள்ள முடியாது என்பதையும் எபிரெய ஆசிரியரைக் கொண்டு நமக்கு தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார் (எபி 9:27)

அப்படியானால், இந்த நியாயத்தீர்ப்பு எதனடிப்படையில் இருக்கும் ? எல்லாவற்றுக்கும் போதுமானதாக இருக்கும் வேதாகமம் இதற்கு என்ன பதில் தருகிறது என்று பாருங்கள். "... தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கும்" (ரோம 2:2) அப்படியானால் எது சத்தியம் ? "... உம்முடைய வசனமே சத்தியம்" (யோவா 17:17) என்று இயேசு கூறுகிறார். நம்முடைய ஆண்டவர் அதோடு நிற்கமால், சத்தியமாக இருக்கக்கூடிய வசனமே நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்குமென்று எச்சரிக்கவும் செய்கிறார். "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" என்று (யோவா 12:48). நியாயத்தீர்ப்பு வேத வசனங்களின்படிதான் இருக்குமென்பதை எத்தனை பேர் புரிந்து, அதற்கேற்றபடி நம்முடைய ஆன்மீக வாழ்க்கையை நடத்திக் கொண்டுள்ளோம் ?

யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்ட விசேஷத்தில் இது இன்னும் கூட தெளிவாகக் காணப்படுகிறது. "மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு

புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகன்படியே மரித்தோர் தங்கள், தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்" (வெளி 20:12). இப்படிப்பட்ட இந்த நியாயத்தீர்ப்பு பட்சபாதம் இல்லாமல் இருக்கும் (ரோம 2:11) நம்முடைய ஒவ்வொரு செயலும், வசனத்தின்படியாக நியாயந்தீர்க்கப்படும். நாம் மாம்சத்திற்கென்று விதைக்கிறவர்களாயிருந்தால், மாம்சத்திற்கென்று அழிவை அறுப்போம். ஆவிக்கென்று விதைக்கிறவர்களாயிருந்தால், ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்போம். (கலா 6:8) இதில் எவ்வித மாற்றமும் இருக்காது.

ஆகையால், அன்பானவர்களே, நம்முடைய ஆன்மீக வாழ்வில் அனைத்தையும் வேத வசனங்களினடிப்படையில் அமைத்துக்கொண்டு, அதன்படி மாத்திரமே வாழ்வோம். வேதவசனங்களே, தேவனுடைய கையில் தூக்கு நூலாக இருக்கப்போகிறது. நம்முடைய தூக்கு நூல் தேவன், அதை வைத்துத்தான் நம்மை நியாயந்தீர்ப்பார். ஆகவே, விழித்திருந்து செயல்படுவோம்.

நாம் ஒவ்வொருவரும் தூக்கு நூல் தரும் பாடங்களை உண்மையாய்ப் புரிந்தவர்களாயும், தூக்கு நூல் தேவன் என்ன செய்வார் என்பதை திட்டமாய் அறிந்தவர்களாயும் நம்முடைய ஆன்மீக வாழ்க்கையை நடத்துவோமாக ! ஆமென்.

**செ. ராஜநாயகம்**

## ஏலகிரி முகாமில்...

**ஆண்கள், பெண்கள், வாலிபப் பிள்ளைகள், சிறுவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் தனித்தனியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**ஆசிரியர்.**

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# ஏழாவது வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

# திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

இடம் : YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)
(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து சுமார் 25 கி.மீ.)
(திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.)

நாள் : மே மாதம் 3, 4, 5 - 2004 (திங், செவ், புதன்)

## சிறப்பம்சங்கள்

* கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான சந்தர்ப்பம்.
* தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தரும் தலைசிறந்த ஊழியர்கள்.
* ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்
* கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
* குடும்பத்துடன் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை.
* பெண்களுக்கு தனி இடவசதி.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**
**பதிவுக் கட்டணம்**
**பெரியவர்கள் ரூ. 75 /- சிறியவர்கள் ரூ. 40 /-**

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382

குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

# கிறிஸ்துவின் இரத்தத்தில் வல்லமை ஏன் இருக்கிறது ?

**சி**லருக்கு இரத்தம் என்கிற போது அது அவ்வளவு நல்ல யோசனையைத் தராது. ஒருவேளை, அவர்களுக்கு ஒரு வெட்டுக்காயம் பற்றியோ, புண்ணைப் பற்றியோ, அல்லது மரணத்தைப் பற்றியோ அது நினைவுபடுத்தும். மத உலகில் சிலர் இந்த வார்த்தையை தங்கள் சொல் அகராதியிலிருந்தே அகற்ற முயற்சித்திருக்கிறார்கள்.

மனிதனின் பாவத்தை நீக்கவும், நிவிர்த்தி செய்யவும், பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவன் மிருக பலியையோ அல்லது இரத்தத்தையோ செலுத்தும்படி சொல்லியிருந்தார். இரத்தம் மிகவும் முக்கியமானது ஏனெனில் அது ஜீவனுக்கு அடையாளமானது, அதில் ஜீவன் இருக்கிறது. இந்தக் காரணத்தால்தான் இரத்தத்தைப் புசிப்பது தடை செய்யப்பட்டது. "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது ; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக் களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன் ; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. அதினிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்க வேண்டாம், உங்கள் நடுவே தங்குகிற அந்நியனும் இரத்தம் புசிக்க வேண்டாம் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன்" (லேவி 17:11, 12)

பழைய பிரமாணமும் இரத்தத்தாலே பிரதிஷ்டை செய்யப்பட்டது, எபிரெய ஆசிரியர், "எப்படியெனில், நியாயப்பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லா கட்டளைகளையும் சொன்ன பின்பு, இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டுமயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து, புத்தகத்தின் மேலும் ஜனங்களெல்லார் மேலும் தெளித்து ; தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான். இவ்விதமாக, கூடாரத்தின்மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின் மேலும் இரத்தத்தைத் தெளித்தான். நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத் தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது. (எபி 9:19-22). பிரதான ஆசாரியன், இரத்தத்துடன் வருடத்திற்கு ஒருமுறை மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லுகிறான்" என்று எபிரெய ஆசிரியர் கூறுகிறார். "இரண்டாங் கூடாரத்திலே பிரதான

ஆசாரியன் மாத்திரம் வருஷத்திற்கு ஒரு தரம் இரத்தத் தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான்" (எபி 9:7). முடிவாக எபிரெய ஆசிரியர் கூறும்போது, "அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்யமாட்டாதே." (எபி. 10:4)

பலியாக செலுத்தப்படும் மிருகங்கள், கறை, திரை அற்றதாக இருக்கவேண்டும் என்பது உண்மையானாலும், அவை மிருகங்கள் தானே. ஆகவே பூரணமான பலி தேவைப்பட்டது. மிருக இரத்தம் வரப்போகிற பூரண பலிக்கு நிழலாகவே இருந்தது. மிருகங்கள் நமது பாவங்களை சுத்திகரிக்காது, மனிதனும் பாவம் செய்தவனாக இருக்கிறான். ஆகவே அந்த பூரண பலியாக யார் இருப்பது ? ஒருவர் மாத்திரமே அதைச்செய்ய முடியும், ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே அவர். கிறிஸ்து பாவமில்லாதவராக வாழ்ந்தார். அப்போஸ்தலன் பேதுரு சொல்லும் போது அவர் பாவமேதும் செய்யவில்லை என்றார். (I பேதுரு 2:22) அவர் பாவம் இல்லாதவராக வாழ்ந்து, நியாயப் பிரமாணத்தை சரியாக நிறைவேற்றி சோதனைக்குட்படாமல், அதன் பின்பு உலகத்தில், பாவத்திற்காக அந்தச் சிலுவையில் மரிக்கலானார்.

கிறிஸ்துவின் இரத்தத்தை மையமாக வைத்து, "வல்லமையுண்டு அற்புத வல்லமை இயேசுவின் இரத்தத்தில்" என்று பாடுகிறோம். இன்னொரு பாடல், "எது என் பாவத்தைக் கழுவும், இயேசுவின் இரத்தம்" என்றும் பாடுகிறோம். அந்த வார்த்தைகள் எத்தனை உண்மை!

இரட்சிக்க முடியாத அநேக காரியங்கள் உண்டு. ஏற்கனவே பார்த்தது போல, மிருகங்களின் இரத்தம் நம்மை சுத்திகரிக்காது, நியாயப்பிரமாணமும் நம்மை இரட்சிக்காது. அது நம்மை கிறிஸ்துவினிடத்தில் தான் கொண்டுவந்தது. பவுல் கூறும்போது, "அப்படியிராதபடியால், இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத் தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின் கீழ் அடைத்துப்போட்டது. ஆதலால், விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே

நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே என்கிறார். (கலா 3:22-25) நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் மூலமாக மாத்திரமல்ல, நாம் செய்யும் எந்த நற்கிரியையின் மூலமாகவும் நம்மால் நம்மை இரட்சித்துக்கொள்ள முடியாது. அதைப்பற்றி பவுல் கூறும்போது, "ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும், பொறாமையோடும், ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கிறவர்களுமாயிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும், மனுஷர் மேலுள்ள அன்பும் பிரசன்னமான போது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின் படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராக்கத்தக்கதாக, அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் அந்த பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்."

நாம் பொன், வெள்ளி ஆகியவைகளால் மீட்கப்பட வில்லையென்று அப்போஸ்தலனாகிய பேதுரு நமக்குச் சொல்லுகிறார் "உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே (I பேது 1:18, 19) மனிதன் இவ்வுலகத்தின் வாழ்க்கையில் எதையும் வாங்கலாம், பணத்தினால் எதையும் சாதிக்கலாம். ஆனால், அவன் இரட்சிப்பை வாங்க முடியாது. ஆகவே, நாம் இவ்வுலகப் பொருளின் மேல் நம்பிக்கை வைக்கக்கூடாது. இறுதியாக, மனுஷனால் நியமிக்கப்பட்ட உபதேசங்களையும், கட்டளைகளையும் மனுஷன் கைக்கொண்டு பரலோகம் போக முடியாது. கிறிஸ்து சொல்லும் போது "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்."(மத் 15:9) யோவான் சொல்லும் போது கள்ளப்போதகர்களுக்கு வாழ்த்துதல் சொன்னால் நாம் அவர்கள்

தீமையான சொல்லுக்கு உடன் படுகிறோம். (II யோவா 11) பவுல் எழுதும் பொழுது பிரிவினைக்கு காரணமாயிருப்பவர்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை சேவிக்கிறதில்லை. (ரோம 16:17, 18)

கிறிஸ்துவின் பலியின் மூலமாகவும் மற்றும் அவருடைய இரத்தம் சிந்தப்பட்டதின் மூலமாகவுமே பாவியாக இருக்கிற ஒரு மனுஷன் இரட்சிப்பை அடைய முடியும். கிறிஸ்துவின் இரத்தத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வசனங்கள் வேதாகமத்தில் அநேகம் உண்டு. பவுல் கூறும்போது நாம் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக தேவனோடு ஒப்புரவாகி இருக்கிறோம் அல்லது தேவனோடு நமது உறவை மீண்டும் துவங்கி இருக்கிறோம். அவர் சொல்லும்போது, "சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று." (கொலோ 1:19, 20) பவுல், எபேசு சபையாருக்கு எழுதும்போது, ஒரு காலத்தில் தேவனை விட்டு தூரமாக இருந்தோம், இப்பொழுது கிறிஸ்துவின் இரத்தத்தினால் சமீபமாயிருக்கிறோம் என்கிறார்.

யூதர்களும், புறஜாதியாரும், அவர்களுக்கு நடுவே இருந்த தடுப்புச் சுவராகிய நியாயப்பிரமாணம் உடைக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இருக்கிறதாகவும் கூறுகிறார். (எபேசி 2:13-17)

கிறிஸ்துவின் இரத்தத்தைப் பற்றி, பவுல் எபேசு சபை கிறிஸ்தவர்களுக்கு எழுதுகையில், "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப் பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. (எபேசி 1:7) கொலோசே பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு அவர் எழுதுகையில், "(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ 1:14) கிறிஸ்து, கர்த்தருடைய பந்தியை ஆரம்பித்து வைக்கையில், "இது பாவமன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக் குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" (மத் 26:28) என்றார். கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக இரட்சிக்கப்படுகிறவர்கள், கர்த்தருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். (அப் 2:47)

**J.C. சோட்**

**பெண்கள் பகுதி :**

# வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை

இன்றைய காலத்திற்கும் இன்றைய நடைமுறைக்கும் ஏற்ற சரியான ஆலோசனையை ஞானி சாலமோன் வெகு காலத்திற்கு முன்பே மிக துல்லியமாக எழுதி வைத்துள்ளான். நீ உன் வாலிப பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை. தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும் என்று பிரசங்கியில் (பிரசங்கி 12:1) பார்க்கிறோம். இளம் உள்ளங்கள் தங்கள் வாழ்கையில் பெரிய போராட்டங்களை சந்தித்துக் கொண்டுள்ளனர். அநேக இரைச்சல்கள் அவர்கள் மனதின் கவனத்தை திசைமாற்றிக் கொண்டிருக்கின்றன. பலவிதமான சக்திகள் அவர்களை துன்மார்க்கமான உலகத்திற்குள் அமிழ்த்துக் கொண்டுள்ளது. புத்தியுள்ள வாலிபர்களோ வேதத்திற்கு தங்கள் செவியை சாய்க்கின்றார்கள். புத்தி கெட்ட இளம் மக்களோ விலை மதிக்க முடியாத பொக்கிஷம் என்னும் வேத அறிவுரையை கேட்க மனதில்லாமல் மிக வேகமாக அழிவுக்குச் செல்லும் பாதையில் பயணம் செய்து கொண்டுள்ளனர். ஞானியின் காலத்திற்குச் சென்று அவர் அறிவுரைக்கு செவி கொடுப்பது. இன்றைய வாலிபர்களுக்கு எவ்வளவு அத்தியாவசியமானதன்றோ !

**I "ஏன் வாலிப பிராயத்திலே சிருஷ்டிகரை நினைக்க வேண்டும் ?"**

பிரசங்கி 12 : 1-ல் கூறப்பட்ட "வாலிப பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" என்பது கட்டளையாகும். இது ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்ட ஒன்று. இதை புறக்கணிப்பதென்பது பிதாவாகிய தேவனின் கட்டளைகளில் ஒன்றைப் புறக்கணிப்பதற்குச் சமம். எப்படி தேவன் நோவாவிடம் ஒரு பேழையை கட்டு என்று சொன்னாரோ, ஆபிரகாமை ஊர் என்கிற கல்தேயர் நாட்டிலிருந்து வா என்று அழைத்தாரே, யோனாவை நினிவேக்கு போய் பிரசங்கி என்று கூறினாரோ. அதே போன்று "உன் சிருஷ்டிகரை வாலிபத்திலே நினை" என்பதும் ஒரு கட்டளையே. வேதத்திலுள்ள சில கட்டளைகள் வாழ்க்கையில் எல்லா கால கட்டங்களுக்கும் பொருந்துகிறதாக உள்ளது. ஆனால் சில கட்டளைகள் அப்படியல்ல. எபேசியர் 6:4-ல் உள்ள ஆலோசனை **ஒருவன் பெற்றோராக மாறும் வரை அதற்கு கீழ்ப்படிய முடியாது**. எபேசியர் 6:4-ல் உள்ள கட்டளை ஒரு

பிள்ளைக்கோ, அல்லது திருமணமே ஆகாத ஒருவருக்கோ பொருந்தாது. ஆனால் பிரசங்கி 12:1-ல் உள்ள ஆலோசனை பிரத்தியட்சமாக வாலிபர்களுக்கு மட்டும் தான் பொருந்துகிறதாகக் கூறப்பட்டுள்ளது. அவைகளை அவன் தன் அந்திய காலத்தில் கடைபிடிக்க முடியாது.

**II வாலிப பிராயத்திலே சிருஷ்டிகரை நினைக்க வேண்டும்?** ஏனென்றால் இதுவே ஒருவருடைய வாழ்க்கையில் நல்ல நாட்களாகும். சங்கீதக்காரன் கூறும்போது, மனுஷனுடைய நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷம் (சங் 90:10) என்கிறான். வயதானவர்கள் மரிக்கிறார்கள். சற்றும் எதிர்பாராத வகையில் விபத்துகளில் சிக்கி வாலிபர்கள் மரிப்பதை நாம் பார்க்கிறோம். எபிரேய ஆசிரியர் அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கபட்டிருக்கிறது. (எபிரேயர் 9:27) யாக்கோபு ஆசிரியர் நாளைக்கு நடப்பது உங்களுக்கு தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது ? கொஞ்சக் காலந்தோன்றி பின் தோன்றாமலிருக்கிற புகையைப் போலிருக்கிறதே" (யாக்கோபு 4:14) என்று கூறுகிறார். இளம் மக்களின் வாழ்க்கையும் புகையைப் போன்றே உள்ளது. தேவனை தேடுவதற்கு சரியான தருணம் வாலிபப் பிராயமே தவிர வேறு தருணம் இல்லை. வயதான பின்பு நினைத்துக் கொள்வேன் என்று நீ திட்டமிட்டால் அது எவ்வளவு பரிதாபமான நிலை தெரியுமா ?

**III வாலிபப் பிராயத்திலே நீ அவரை நினைக்க வேண்டும்.** ஏனென்றால் **உன்னுடைய நம்பிக்கைக்கு அவர் பாத்திரமானவர்.** சுயநலமுள்ள சாத்தான் வாலிபர்களை அழிவுக்கு கொண்டு செல்வதில் மிகவும் நாட்டமுள்ளவனாக இருக்கிறான். அவர்களின் சரீரம், ஆவி, ஆத்துமா இ ப்படி எல்லாவற்றையும் நாசப்படுத்துகிறான். தற்காலிகமாக இன்பத்தைக் காட்டி தந்திரமாக அவர்களை நிரந்தர சோதனைக்கு அனுப்புகிறான்.

தேவன் வாலிபர்களை சிருஷ்டித்து, பரத்திலிருந்து எல்லா நன்மைகளையும், கிருபைகளையும் ஏராளமாய் பொழிந்து கொண்டிருக்கிறார். தேவனும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் இந்த இளம் உள்ளங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்று ஆவலாய் உள்ளனர். எனவே வாலிபர்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள அவர் பாத்திரமுள்ளவராயிருக்கிறார்.

**IV. நான்காவது, நீ ஏன் வாலிப பிராயத்திலே உன் தேவனை நினைக்க வேண்டுமென்றால்,** இயேசு கிறிஸ்து உண்மையாலுமே உன் வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறாரா என்பதை உன் நண்பர்கள்

கவனிக்கிறார்கள். அவர்கள் வாசிக்கிற வேத வசனங்கள் ஒருவேளை நீயாக இருக்கலாம். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதும்போது... "எங்கள் நிருபம் நீங்கள்தானே" (II கொரிந்தியர் 3:2) என்கிறார். நம்மைச் சுற்றிலும் இருக்கிற மக்கள் நம்முடைய வாழ்க்கை முறைகளை நன்கு கவனித்துப் படித்துக் கொண்டுள்ளனர்.

நம் வாழ்க்கையின் மூலம் சுவிசேஷமானது எப்படி மற்றவர்களால் வாசிக்கப்படும் ? பிறர் நம் வாழ்க்கையை கூர்ந்து கவனிப்பதால் நாம் எப்படி வாழவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் பவுல் அடிகளார் இளைஞர்களாகிய தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் எழுதும்போது, உன் இளமையை குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடத்தையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாய் இரு (I தீமோ 4:12) என்கிறார். **ஆத்தும ஆதாயப் பணியில்** முதியோரைக் காட்டிலும் வாலிபர்கள் அதிக உற்சாகத்தோடு அதிக எண்ணிக்கையில் சாதனை படைக்க முடியும்.

V. வாலிபப் பிராயத்திலே தேவனை நினைக்க வேண்டும். ஏனென்றால் அவர் உன்னை வாலிபத்திலே நினைத்திருக்கிறார். இமைப்பொழுது நேரம் கூட அவர் நம்மை மறந்து விடுவதில்லை. நீ ஒருவேளை அவரிடமிருந்து உன்னை ஒளித்து, அவருக்கு விரோதமாகச் சென்று கொண்டிருக்கலாம். ஆனால் அவர் கிருபையும், அன்பும் உள்ளவராய் உன்மேல் இரங்குகிறவராயிருக்கிறார். பதிலுக்குப் பதில் செய்யும் முறையிலாவது நீ உன் சிருஷ்டிகரை வாலிபத்திலே நினைக்க வேண்டும்.

VI. பிதாவாகிய தேவன் வாலிபர்களால் நினைக்கப்பட வேண்டும். ஏனென்றால், உனக்கும் கூட இராஜ்யத்தின் பொறுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவருடைய இராஜ்யமாகிய சபையில் நீயும் அங்கமாக இருந்து செயல்பட வேண்டுமென்று ஒவ்வொரு வாலிபரிடமும் அவர் எதிர்பார்க்கிறார். தேவனுடைய பிரதான கட்டளை (மத் 28:18-20 : மார்க் 16:15-16 : லூக்கா 24 : 46-49) வாலிபர்களுக்குப் பொருத்தமானவைகளாக உள்ளன. விழுந்து கொண்டிருக்கிற சமுதாயத்தை பாதுகாத்து எடுத்து நிறுத்த இன்றைய கிறிஸ்தவ வாலிபர்களின் உதவிக்கரம் தேவையாய் உள்ளது. வாலிபர்களின் தூய்மையான, நல்ல பக்தியான வாழ்க்கையானது மற்றவர்களும் இயேசுவண்டை ஓடிவர ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

# அவர் மட்டும் எப்படி ?

"துணிந்தவனுக்கு தூக்கு மேடையும் பஞ்சு மெத்தை என்பர் பெரியோர் ! எங்களால் எதுவும் செய்ய முடியும், சீனப் பெருஞ்சுவரை தரைமட்டமாக்க வேண்டுமா ! ஆழியின் நீரை அணையிட்டுத் தடுக்க வேண்டுமா ! மண்ணை வைத்து விண்ணவர் வகுத்த எல்லையை மீறிவரும், சீறிவரும் அலைகடலை அதே மணல் மூட்டைகளை வைத்து தடுப்போமென முழங்கும் வாலிப நெஞ்சங்களை நம் அனைவருக்காகவும் விண்ணகம் விடுத்து, மண்ணகம் நாடிவந்த, இயேசு பிரானின் தூயத்திரு நாமத்தினால் எனது வாழ்த்துக்கள்.

நமது ஆண்டவர் இயேசு, இந்தப் புவியில் நடமாடியபோது, அவருக்கு நெருக்கமாக இருந்து, அவர்தம் மார்பில் சாய்ந்து கொண்ட யோவான் எழுதின நற்செய்திநூலில் எட்டாம் அத்தியாயம், இருபத்தி ஒன்பதாம் வசனத்தில் இப்படியாத்துக்கொடுக்கிறார். "என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்க விடவில்லை என்றார்" என்று. எனக்கன்பான வாலிபனே, செங்குருதி சிந்தி நமக்கு பரலோக கதவை திறந்து, விண்ணகத் தந்தையின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறவர் சொல்கிறார், அவர் இந்த பூமியில் இருந்தபோது பிதாவுக்கு இஷ்டமானதைச் செய்தேன் என்று. இதை நான் படித்தேன், நமது தமிழ்மொழி போலவே இது, ஒருபடி தேன்போல இனித்ததால் உங்களுக்கும் வழங்க நினைத்தேன், வழங்குகிறேன். படித்து பயன்பெறுவீர்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையில்.

## உன்னதரின் உணவும்...

ஆதியிலே வார்த்தையாக இருந்து ஆதரை மீது அவதரித்த ஆண்டவர், இப்புவியில் மேற்கொண்ட பயணங்கள் பல உண்டு. அவர் ஒரு முறை யூதேயா நாட்டிலிருந்து கலிலேயா நாட்டிற்கு போகவேண்டிய சூழல் எழுந்தது. கலிலேயா சென்றடைய வேண்டுமானால் சமாரியாவின் சமவெளிகளைக் கடந்துதான் போக வேண்டும். அண்ணல் இயேசு நடந்தே சீகார் என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தார், பயணத்தால் ஏற்பட்ட இளைப்பால், களைப்பால்

யாக்கோபின் கிணற்றன்டை அமர்ந்தபோது சமாரியா ஸ்திரீயோடு நடந்த சம்பாஷணை பற்றி வாலிபர்களாகிய உங்களுக்கு நன்றாகவே தெரியுமென திடமாக நம்புகிறேன்.

அவரே கிறிஸ்து என்று அந்த பெண்மணியிடம் தன்னைப்பற்றி, விளக்கிவிட்ட நேரத்தில், இயேசு தன் கண்மணிகளாய் கருதின சீஷர்கள் அவ்விடத்திற்கு வந்து சேருகின்றனர். மங்கையிடம் மன்னவன் பேசுவது கண்டு, இது என்ன விந்தை என தங்களது சிந்தனையில் ஆச்சரியமுற்றது உண்மையென்றாலும், ஒருவரும் அவரிடம் அதைபற்றி கேட்கும்படி நாவசைக்கவில்லை.

குவலயத்து வாழ்வில் தன்னிகரில்லா தற்பரன் இயேசுவால், தன் வாழ்வில் நிகழ்ந்தது கண்டு, தான் வந்த நோக்கம் மறந்து, குடத்தை அவ்விடத்தை விட்டு, விட்டு ஊருக்குள் சென்று, மக்களிடம், நான், மாக்களாய் நடந்த காலத்தைப் பற்றியெல்லாம் ஒருவர் சொன்னார் ; அவர் கிறிஸ்து தானோ என்று கூறலானால், இதைக்கேட்ட ஊராரும் அவ்விடத்தேயிருந்த அனைத்து சாராரும், ஏகமாய் இயேசுவிடம் வந்தார்கள். இவ்வாறு நிகழ்வுகள் நடந்தேறுகையில், சீஷர்கள் இயேசுவானவரைப் பார்த்து கரிசனையுடன் "போஜனம் பண்ணும் என்று வேண்டிக் கொண்டார்கள்", (யோவா 8:31)

இயேசுவானவர் மேற்கொண்ட பயணத்தில் தனது அங்கம் இளைப்படைந்தவராகத்தானே அங்கமர்ந்தார் (யோவா 8:6), சரி, சமாரியா நாட்டார் வருகிறார்கள், ஆகவே அவர்கள் வருவதற்குள் போஜனத்தைக் கொடுங்கள் நான் சாப்பிடட்டும் என்று கேட்பார் என்று எதிர்பார்த்தால், எந்நாட்டார் வந்தால் என்ன, அவரோ, போஜனம் நாடாராகவே திகழ்ந்தார், அவர் சொல்லுவதை அவர் வார்த்தையில் எழுதுகிறேன் படியுங்கள், "நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு என்றார்" (யோவா 8:32) இது என்னடா, கொடுமை ! நாம் போஜனம் கொள்ளத்தானே, ஊருக்குள் சென்றோம் ! அதற்குள் எந்த ஜனம் இவருக்கு போஜனம் கொடுத்தது என்று சிந்திக்கலானார்கள் சீஷர்கள். ஆனால், அவரோ, இவர்கள் தான் சொன்ன ஆவிக்குரிய அர்த்தத்தை புரிந்து கொள்ளவில்லை என்பதால் "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்து **அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது என்றார்" (யோவா 8:34)**

நமது ஆண்டவரால் மாத்திரம் எப்படி, பிதாவுக்கு பிரிய மானதை எப்பொழுதும் செய்ய முடிந்தது. ஏனெனில், அவர் சரீரத்திற்கான

உணவைக் காட்டிலும், தேவனுடைய சித்தம் செய்வதில் மிகவும் கவனமாக இருந்தார், ஆகவேதான் அவரால் அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை செய்யுங்கள் என்று சொல்ல முடிந்தது, அதை செய்து முடிக்கவும் முடிந்தது (யோவா 6:27). ஆகவே எனக்கன்பானவர்களே, நமது ஆண்டவரின் பணியை நமது வாழ்விலும் மேலாக கருதுவோம். மனுஷர்களாகிய நாம் ஆகாரத்தினால் மாத்திரம் உயிர் பிழைக்காமல், தேவனுடைய வாயிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு வார்த்தையினாலும் வாழ்கிறோம் என்றிந்து, கிறிஸ்துவைப்போல தேவ சித்தம் செய்வதே நமது கொள்கை எனக்கொள்வோம்.

## என் சித்தம் அல்ல

தேனினும் மதுரமான நமது ஆண்டவர் இயேசு, தேகத்தில் உருக்கொண்டு, பல்லாயிரம் ஆண்டுகளாய் தேங்கிவரும் பாவத்தால் மனம் ஏங்கி நிற்கும் வையத்து மாந்தர்களுள் நடமாடிய போது, பழைய ஏற்பாட்டுக் காரியங்களுக்கு விளக்கம் அளித்துப் பேசுவது வழக்கம். அப்படி ஒரு முறை முன்னாளில் வாழ்ந்த மூதாதையர்கள் அனுபவித்த மன்னாவைப் பற்றி கூறுகையில், பழைய ஏற்பாட்டின் மாமனிதனாகிய மோசே அந்த மன்னாவை உங்களுக்கு கொடுக்க வில்லை என்றும், வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றும் விளம்பினார்.

மனுக்குலம் அரைசாண் வயிற்றுக்கு எத்தனை அல்லல்படுகிற தென்பது நாம் அறிந்த ஒன்று தானே ! ஆகையால் உடனே ஆண்டவரைப் பார்த்து அது எப்பொழுதும் எங்களுக்கு வேண்டும் என்றார்கள். (யோவா 6:34) இதே அதிகாரத்தில் தான், நமது ஆண்டவர் அழிந்து போகிற போஜனத்திற்கு மாத்திரம் கிரியை செய்ய வேண்டாம் என்றபோதிலும், இவர்களோ இன்னும் உணர்ந்தபாடில்லை. ஆகவே, பளிச்சென்று "ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான். நீங்கள் என்னை கண்டிருந்தும் விசுவாசியாமலிக்கிறீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்... **என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை"** என்றார். (யோவா 6:37)

எனக்கன்பானவர்களே ! நாம் இன்று உதவி கேட்டு யார் யாரிடமோ ஓடுகிறோம் ! நாசியில் சுவாசமுள்ள மனுஷனை நாம் நம்பி, சில முறை வெற்றி காண்கிறோம். ஆனால் அநேக முறை

தோல்வி முகம் தான் ! நமதாண்டவர் எத்துனை அன்பாக நான் எட்டித்தள்ளுவதில்லை என்கிறார் பாருங்கள். பணம் தேவை, குடும்பமே நடுத்தெருவில் நிர்க்கதியாக நிற்கும்போதுகூட நீ என் வாசலை மிதியாதே என்று இரக்கமில்லாமல் கூறிய அறிஞர்களை நான் அறிவேன். ஆனால், அறிஞர்களுக்கு அறிவைத் தருகிற ஆண்டவரோ, நான் உன்னைத் தள்ளுவதில்லை என்கிறார். நாம் மனதுருகி அவரிடம், நொறுங்குண்ட ஆவியோடு, கண்ணீர் சிந்தி, அவர் வேதம் சொல்லுகிறபடி செய்து, ஜெபம் செய்தால் சர்வவல்லவர் நிச்சயமிரங்குவார், நாம் மனம்பதற வேண்டாம் வாலிபர்களே !

எனக்கன்பானவர்களே ! அடுத்த வசனத்தில் விண்ணகவித்து என்ன மொழிந்தது எனப்பாருங்கள், "என் சித்தத்தின் படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்" (யோவா 6:38) ஏன் ? பிதாவானவர் இயேசுவைத் தனிமையில் விடவில்லை, எப்பொழுதும் நமது ஆண்டவருக்கு பிதாவின் சித்தம்தான் தலையாகிய கடமை. மரணத்தின் அருகாமையில், கெத்சமனே தோட்டத்திலும் நமது ஆண்டவர் இரத்தம் சிந்திய வேளையிலும், தனது சித்தத்தை நாடவில்லை, அவர் பிதாவின் சித்தத்தையே நிறைவேற்றினார், அதுபோலவே எனக்கன்பானவர்களே நாமும், இவ்வுலகில் நமது சித்தம், என்று நம்மை முதன்மைப் படுத்தாமல், பிதாவின் சித்தம் நிறைவேற்றினால் அவரைப்போல பூரணமாக செய்ய முடியாவிட்டாலும், நாமும் பிதாவுக்கு பிரியமானதைச் செய்ய முடியும். அவரும் நம்மைத் தனிமையில் நிச்சயம் விடமாட்டார் ! ஆமென் !

ஜே. பிக்கின்ஸ்

## நடப்புச்செய்திகள்

- இலங்கை நாடாளுமன்றத்தேர்தலில் சந்திரிகா குமாரதுங்காவின் கூட்டணி ஆட்சியைப்பிடித்தது.
- எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தலுக்கான பிரச்சாரம் உச்சகட்டத்தை அடைந்து வருகிறது.
- பிரதமர் வாஜ்பேயின் லக்னோ தொகுதியில் இலவச சேலை விநியோகத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசல் சாவு தான், இந்தியா ஒளிர்கிறதற்கான சான்றா என்று கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.
- கிரிக்கெட்வீரர் பிரைன் சார்லஸ் லாரா டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 400 ரன்கள் குவித்து புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

சிறுவர் பகுதி

# தைரியமுள்ள தீர்க்கதரிசி

எனக்கன்பான சிறுபிள்ளைகளே, உங்கள் யாவரையும் நமதாண்டவர் இயேசுவின் இரக்கமுள்ள நாமத்தில் வாழ்த்துகிறேன். இம்மாதமும் தொடர்ந்து உங்களை இதன் மூலம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நீங்களும் சந்தோஷமடைவீர்கள் என நம்புகிறேன். ஒவ்வொரு மாதமும் வெளிவரும் செய்திகள், வேதாகமகதைகள் பயனுடையதாயிருக்கும் என விசுவாசிக்கிறேன். இம்மாதமும் ஒரு தீர்க்கதரிசி மூலம் நாம் சில பாடங்களைக் கற்றுக் கொள்ளப் போகிறோம். யார் அந்த தீர்க்கதரிசி ? தொடர்ந்து பாடத்தை படியுங்கள்.

உங்கள் எதிர்காலத்தைப் பற்றியெல்லாம் கூறும் நபரையோ அல்லது அதைப்பற்றிய செய்திகளையோ கூறும் விளம்பரங்களையோ நீங்கள் ஒருவேளை பார்த்திருக்கக்கூடும். அவர்கள் "பணத்திற்காக" உடனே உங்கள் எதிர்காலத்தை பற்றி கூறுகிறார்கள். அப்படித்தானே ? மக்களும் அதை ஏனோ விரும்பு கிறார்கள். இதுவும் மறுக்க முடியாத உண்மைதான். ஏன் அப்படி ? என்று யோசித்தால் மக்கள் தங்கள் எதிர்காலத்தை பற்றி அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதே பதில். இதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும் நாம் இந்த காரியத்தை குறித்து எப்படி சிந்திக்க வேண்டும் தெரியுமா ? சொல்கிறேன் கேளுங்கள் : இந்த காலத்தில் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்பதை எவராலும் கூறமுடியாது. மேலும் அவை அனைத்தும் பொய்யான கூற்றுகளேயாகும்.

சரி, நாம் பாடத்திற்கு வருவோம். நம் வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில், எதிர்காலத்தில் நடக்கப்போகிற அல்லது இன்னும் சொல்லப்போனால் நிறைவேறப்போகிற பல தீர்க்கதரிசனங்களை பார்க்கமுடியும்.

தேவன் தம் மக்களோடு பேசுவதற்காக தனக்கும் தன் மக்களுக்கும் இடையே ஒரு மனிதனை தெரிந்தெடுத்து அவன் மூலமாக தன் செய்திகளை தம் மக்களுக்கு தெரியப்படுத்தினார். அவ்வாறு தேவன் ஏற்படுத்தின மனிதர்களே தீர்க்கதரிசிகள் ஆவர். தீர்க்கதரிசியானவன் தேவனிடத்திலிருந்து செய்திகளை பெற்றுக் கொண்டு அதை மக்களிடத்தில் கூறிவந்தான். தேவன் கொடுக்கும் எச்சரிப்புகளையும், கீழ்ப்படியாமையினால் என்ன நடக்கும் என்பதை பற்றியும் கூறி வந்தான்

அப்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தீர்க்கதரிசிகளில் ஒருவன் தான் **"எரேமியா"**. ஆம், நான் கூறிய தீர்க்கன் எரேமியா தான். சரி, இப்பொழுது இவரிடமிருந்து சில பாடங்களை கற்றுக்கொள்வோம். ஏரேமியா வாழ்ந்த காலத்தில் இருந்த தேவ ஜனங்கள் விக்கிரகங்களையும், பொய் தேவர்களையும் வணங்கி வந்தார்கள். அவர்கள் தங்களைக் காப்பாற்றின, காப்பாற்றிவந்த ஒன்றான மெய்த்தேவனை மறந்து போனார்கள். தேவனுடைய கோபம் அதினால் அந்த ஜனங்கள் மேல் மூண்டது. எனவே தேவன் ஏரேமியாவை பயன்படுத்தி அவருடைய கோபத்தை மக்களுக்கு தெரியப் படுத்தினார். "ஏரேமியாவிடம், தம் ஜனங்களின் பாவத்தை விட்டு விடுவதில்லை" என்று தேவன் கூறினார். ஏரேமியா மக்களிடம் கூறிய எச்சரிப்பு என்னவென்றால் "தேவன் இனி உங்களை காப்பாற்றி வழிநடத்த போவதில்லை"; "பாவத்திற்கு தண்டனையாக, ஜனங்கள் பாபிலோனியர்களிடம் 70 வருடம் அடிமைகளாயிருப்பார்கள்" என்று கூறினான். எரேமியாவிடமிருந்து வந்த இந்த எச்சரிப்பு பயங்கரமானதாயிருந்தாலும், மக்கள் இதை பெரிய காரியமாக எண்ணவில்லை. மாறாக, எரேமியாவை அந்த எச்சரிப்புகளுக்காக கேலி செய்து அவரை சிறைப்படுத்தி, கொன்றுபோடக்கூட முடிவு செய்தார்கள்.

எரேமியா தன் வாழ்க்கைக்காக பயப்பட்டிருந்தாலும், தேவன் மீது அவனுக்கு இருந்த விசுவாசம் அவனுக்கு தைரியத்தை கொடுத்தது. அது அவரை மேலும் தேவனுடைய செய்திகளை மிகுந்த துன்பத்தின் இடையிலும் பேச வைத்தது. எனவே தான் நாம் எரேமியாவை "தைரிய" தீர்க்கதரிசி என கூறமுடிகிறது.

இந்த காலத்தில் தேவன் வேதாகமத்தை நமக்கு தந்துள்ளார். நாம் செய்ய வேண்டிய ஒரு முக்கியமான வேலையை தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். என்ன வேலை அது? நாமும் எரேமியாவை போல தைரியம் கொண்டு, தேவன் நமக்கு செய்த எல்லா நன்மை களையுங்குறித்தும், அவரைப் பற்றிய காரியங்களையும் இச்சிறு பிராயத்திலிருந்தே மற்றவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். அப்பொழுது நாம் தேவனுக்கு பிரியமான பிள்ளையாய் இருப்போம். அப்படி செய்வீர்களா ?

*தேவன் உங்களோடே இருக்கிறார். நம்மை ஆசீர்வதிப்பார்.*

RAR நாயகம்

மனப்பாட வசனம் : எபி:10:35

# எபிரெயர் ஒரு கண்ணோட்டம்

**ஆசிரியர் :** திட்டமாக தெரியவில்லை **காலம் :** ஏறக்குறைய கி.பி. 63

## இந்நூல் பற்றி

1. இந்நூல் எழுதப்பட்டிருக்கும் மொழிநடையை வைத்து அநேகர் இது பவுல் எழுதின நிருபம் என்கிறார்கள். வேறு சிலரோ இது வேதவாக்கியங்களில் சாதுர்யவானாக இருந்த அப்பொல்லோ எழுதியது என்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் ஆசிரியர் யார் என்பதை மறை பொருளாக வைத்திருக்கிறார்.
2. "மேலானது" (Better) என்கிற ஒரே வார்த்தையில் இந்நிருபமே அடங்கிவிடுகிறது.
   - (a) இயேசுவானவர் தூதர்களைவிட மேலானவர் (1:1-7)
   - (b) பழைய ஏற்பாட்டு ஆசாரியரை விட இவர் மேலானவர் (5:5-10)
   - (c) பழைய ஏற்பாட்டை தேவனிடம் வாங்கித் தந்த மோசேயை விட இவர் மேலானவர் (3:1-6)
   - (d) இயேசுவானவரின் ஆசாரியத்துவம் மேலானது. (அதி. 7)
   - (e) பழைய ஏற்பாட்டு பலிகளைப் பார்க்கிலும் கிறிஸ்து மேலானபலியாக இருக்கிறார். (9:23-10:10)
3. இந்நூல் கிறிஸ்தவத்தை தழுவியவர்கள் மீண்டும் யூத மார்க்கத்தை தழுவ நினைத்தபொழுது, அதை தடுத்து நிறுத்தும்படியாய் எழுதப்பட்டது.
4. பாலஸ்தீன கிறிஸ்தவர்களுக்கு இந்நூல் எழுதப்பட்டது போலத் தெரிகிறது. (10:25; 8:4; 10:11; 32-34; 13:13, 24; 12:4)
5. 11-ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விசுவாசிகளின் பட்டியலில் எல்லாரும்
   - (a) தாங்கள் செய்ததை முதன்முதலில், அதாவது தங்களுக்கு முன் வேத சரித்திரத்தின் உதாரணத்தை பார்த்துச்செய்யாமல், தாங்களே அப்படி செய்தார்கள்.
   - (b) விசுவாச வீரர்களின் பட்டியலில், அனைவரும் ஏதோ ஒரு வினையை செய்திருக்கிறதை நமக்கு காட்டுகிறது.

**இந்நூலின் செய்தி :**

- (a) தேவனுடைய பெரிதான இரட்சிப்பைப் பற்றி அசட்டையாக இருந்தால், தண்டனைக்கு நாம் தப்ப முடியாது.
- (b) தேவனுடைய ஜனத்திற்கென்று இளைப்பாறுதல் உண்டு.
- (c) சபை கூடி வருதலை நாம் விட்டுவிடக்கூடாது (10:25)
- (d) பரலோக சத்தத்தை வசனத்தின் மூலம் கேட்கும்போது, நாம் நம்முடைய இருதயத்தை கடினப்படுத்தக் கூடாது.

# விசுவாசத்தின் அடிப்படைகள்

“**வே**தாகமத்தின் ஏவுதல் மற்றும் அதிகாரம்” என்பது பற்றி நாம் படித்துக் கொண்டு வருகிறோம். “அதிகாரத்தின் நம்முடைய அளவுகோல் என்ன?” என்ற கேள்விக்குப் பதில் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஆரம்பித்தோம். தேவனுக்கு மாத்திரமே சகல அதிகாரங்களும் உண்டு என்று பார்த்தோம். அந்த அதிகாரத்தை பிதா இயேசுவுக்குக் கொடுத்தார்.

இயேசுவானவர் அந்த அதிகாரத்தை அப்போஸ்தலர்களுக்கும் மற்றும் ஆவியில் ஏவப்பட்டு எழுதின மற்றவர்களுக்கும் கொடுத்தார். அத்துடன், பரிசுத்த ஆவியானவரை அனுப்பினதால், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தும்படியான வல்லமையைக் கொடுத்தார். முதல் நூற்றாண்டுக் காலத்தில், ஆவியானவரின் ஏவுதலைப் பெற்ற அந்த தேவ மனிதர்கள், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தினார்கள். அப்பொழுது அவர்கள் பேசின வார்த்தைகளை, பரிசுத்த ஆவியின் வல்லமையால் அவர்கள் செய்த அற்புதங்களின் மூலம், தேவன் உறுதிப்படுத்தினார்.

அச்செயல்களின் பலன் தான், தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமம். தேவனுடைய வார்த்தைதான், அவருடைய அதிகாரத்தின் அளவுகோலாக இருக்கிறது. அது முழுமையானதும், எல்லாவற்றுக்கும் போதுமானதாகவும் இருக்கிறது. மேலுமாக, இதிலிருந்து, எந்த வகையிலும் கூட்டவோ, குறைக்கவோ கூடாது என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார்.

அடுத்து, கீழ்க்காணும் கேள்விகளுக்குப் பதில் கொடுக்க விரும்புகிறோம்.

“வேதாகமம், தேவ ஆவியினால் ஏவப்பட்டது என்று சொல்லும்போது அதன் பொருள் என்ன ?”

“ஏவப்பட்டது” என்ற மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை, இரண்டு ஆதார வார்த்தைகளின் கூட்டாக இருக்கிறது. ஒன்றினுடைய பொருள் தேவன் என்பது, மற்றதின் பொருள் ஊதினார் என்பது. ஆகவே, “ஏவப்பட்டது” என்பதின் பொருள் “தேவன் - ஊதினார்” என்பது அல்லது தேவனுடைய வாயிலிருந்து ஊதப்பட்டது என்பது.

சரி, வேதாகமம் தேவனால் ஏவப்பட்டது தானா ? (II தீமோ 3:16)-ல் "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டது !" என்று நாம் வாசிக்கிறோம். ஆகவே, வேத வசனங்கள் தேவனுடைய வாயிலிருந்து ஊதப்பட்டவை. எரே 1:17-ல், இப்படியாக தேவன் தன்னுடைய தீர்க்கதரிசிக்கு சொல்லியிருக்கிறார். "இதோ என் வார்த்தைகளை உன் வாயில் வைக்கிறேன்." இங்கே கர்த்தர், அவருடைய வார்த்தைகளை உன் வாயில் வைக்கிறதை தயவாய் கவனியுங்கள். ஆகவே, எரேமியா பேசினவைகள், தேவனுடைய வாயிலிருந்து ஊதப்பட்டவை ! அது ஏவப்பட்டது.

(II பேதுரு 1:21)-ல் காணப்படும் வல்லமையான வார்த்தைகளைப் பாருங்கள். "தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை, தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்." ஆக, தீர்க்கதரிசிகள் பேசினவைகள் அவர்களுடைய சொந்த வார்த்தைகள் அல்ல. தேவனுடைய வார்த்தைகளைப் பேசும்படியாகப் பரிசுத்த ஆவியானவர் அவர்களை ஏவினார். அந்த வார்த்தைகளெல்லாம் தேவனுடைய வாயிலிருந்து ஊதப்பட்டவை.

வேதாகம எழுத்தாளர்கள், தங்களுடைய செய்தி கர்த்தரிடத்திலிருந்து வந்தவை என்பதைத் தெரிவிக்கும்படியாக, 2000 முறைக்கும், மேலாக, **"கர்த்தர் சொல்லுகிறதாவது"** என்றும் அல்லது அதற்கு இணையான வார்த்தைகளைக் கொண்டு பேசியிருக்கிறவர்கள். உண்மையாகவே, வேதாகமம் ஏவப்பட்டது தான் ! ஒவ்வொரு வார்த்தையும் தேவனுடைய வாயிலிருந்து வெளிப்பட்டவையே.

**வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று நம்புவதற்கு வேதாகமத்தின் சொந்த சாட்சி தவிர, வேறு ஏதாவது காரணங்கள் இருக்கிறதா ?**

இந்தக் கேள்விக்குப் பதில் "ஆம்" என்பதே. வேதாகமம் தேவனால், ஏவப்பட்ட வார்த்தை என்பதற்கு கீழ்க்காணும் காரணங்களைக் கவனியுங்கள்.

முதலாவது, இதன் **அபார ஒற்றுமை** வேதாகமத்தைப் பற்றிய ஆச்சரியமூட்டும் உண்மைகளை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா ? இது 66புத்தகங்களைக் கொண்டுள்ளது. தேவன் தன்னுடைய சித்தத்தை வெளிப்படுத்துவதற்கு, வித்தியாசமான பின்னணிகளையும்,

தொழில்களையும் கொண்ட, சுமார் 40 பேரை பயன்படுத்தினார். அவர்களில் பலர், ஒருவரையொருவர் அறிந்திருக்கவில்லை. இது 1600 ஆண்டுகால இடைவெளியில் எழுதப்பட்டது. இவைகளை எழுதுவதற்குத் தேவன் மூன்று மூல மொழிகளைத் தெரிந்துகொண்டார்.

இருப்பினும், எந்த முரண்பாடும், சச்சரவுகளும் இல்லாமல், **ஒரே (பிரதான) மையக்கருத்தை** கொண்டுள்ளது. அது இயேசுக் கிறிஸ்துவாகிய தன்னுடைய குமாரன் மூலம் மனிதன் இரட்சிப்படைவதும், தேவன் மகிமைப்படுவதாகும்.

நாற்பது இசைக்கலைஞர்கள் தனித்தனியாக, எந்த ஒரு மேற்பார்வையுமில்லாமல், ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளியில், இசை நாதங்களை ஒன்றாக எழுப்புவதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? அப்படி ஒருபோதும் நடந்ததில்லை, நடக்கப் போவதுமில்லை!

வேதாகமத்தின் மூலம் தன்னுடைய சித்தத்தை வெளிப்படுத்தும் பெரிய காரியத்தை, பல மனிதர்களைக் கொண்டு, பல ஆண்டுகால இடைவெளியில், எந்தவொரு முரண்பாடும் இல்லாமல், முற்றிலும் ஒன்றுக்கொன்று இசைந்து வரும்படியாக, தேவனால் மாத்திரமே செய்யமுடியும். நிச்சயமாகவே, வேதாகமம் தேவனுடைய ஏவுதலின்படியானதே என்பதற்கு இது ஒரு அடையாளமாகும்.

வேதாகமம் தேவ ஏவுதலின்படியானது என்று நம்புவதற்கான இரண்டாவது காரணம், நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கும் முன்பாக கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களின், முழுமையான, துல்லியமான நிறைவேறுதலாகும்.

மனிதர்களால், முன்னொருபோதும் இப்படிச்செய்ய முடிந்ததில்லை ! மனிதனல்ல, தேவன் தான் வேதாகமத்தை ஆக்கியவர் என்பதற்கு இது ஒரு திட்டமான அடையாளமாயிருக்கிறது ! நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்பாகப் பார்த்து, என்ன நடக்கும் என்பதை தேவனால் மட்டுமே கணித்துக் கூற முடியும். தேவனால் மாத்திரமே, அப்படித் துல்லியமாகவும், விவரமாகவும், அவர் சொல்லியபிரகாரமாகவே, பின்னாளில் நடந்தேறக்கூடிய சம்பவங்களை முன் கூட்டியே சொல்ல முடியும் !

உதாரணமாக, இயேசுவானவர் பூமிக்கு வருகிறதற்கு **முன்பாகவே,** கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய ராஜ்யம் பற்றியும் பழைய ஏற்பாட்டில் 406 முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று ஒருவர் கணக்கிட்டுள்ளார்.

## இவைகளைக் கவனியுங்கள் :

| தீர்க்கதரிசனம் | பழைய ஏற்பாட்டில் முன்னறிவித்தல் | பழைய ஏற்பாட்டில் நிறைவேறுதல் |
|---|---|---|
| மேசியாவாகிய இரட்சகர் பற்றி முதல் தீர்க்கதரிசனம் (இரட்சகர்) | ஆதி 3:15 | கலா 4:4 |
| யூதா கோத்திரத்தில் பிறப்பார் | ஆதி 49:10 | வெளி 5:5 |
| கன்னியினிடத்தில் பிறப்பார் | ஏசாயா 7:14 | மத் 1:23 |
| பெத்லகேமிலே பிறப்பார் | மீகா 5:2 | மத் 2:1-6 |
| அவர் துக்கம் நிறைந்தவரும், அசட்டைப்பண்ணப்பட்டவரும், புறக்கணிக்கப்பட்டவருமாயிருந்தார். | ஏசாயா 53:2, 3 | மத் 27:30-31 |
| மற்றவர்களுடைய பாவங்களை சுமப்பார் | ஏசா 53:5,6,11 | I பேது 2:24 |
| சிநேகிதனாலே காட்டிக்கொடுக்கப்படுவார் | சங் 4:9 | மாற் 14:10, 21 |
| 30 வெள்ளிக்காசுக்குக் காட்டிக் கொடுக்கப்படுவார் | சகரியா 11:12, 13 | மத் 26:15 |

வேதாகமம், தேவனால் ஏவப்பட்டுக் கொடுக்கப்பட்டதென்று நம்புவதற்கான மூன்றாவது காரணம், அதன் **பாரபட்சமற்ற தன்மை.** மனிதர்களால் எழுதப்படும் புத்தகங்களில், ஒருவனுடைய நற்காரியங்களைப் பெரிதாக எழுதுவார்கள் அல்லது அவனைப்பற்றிய தீயவைகளை வலியுறுத்துவார்கள். இரண்டையும் சேர்த்து மிக அரிதாகவே எழுதுவர். ஆனால், தேவன் வேதாகமத்தில் எப்படி வெளிப்படுத்தியிருக்கிறார் என்று வேறுபடுத்திப்பார்க்க வேண்டும்.

உதாரணமாக, தேவன் நோவாவை நீதியைப்பிரசங்கித்தவன் என்று கூறுகிறார். பல சமயங்களில் தேவன் கட்டளையிட்ட **எல்லாவற்றையும்** நோவா செய்தான் என்று சொல்லப்பட்டுள்ளது. இருப்பினும், அவன் ஒருமுறை குடித்து வெறித்திருந்தான் என்று தேவன் எழுதிக் கொடுத்துள்ளார்.

மகத்தான மனிதனாகிய தாவீது பற்றி எப்படி ? தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற தாசன் என்று விவரிக்கப்பட்டுள்ளான். இருப்பினும், அவன் விபச்சாரத்திலும், கொலையிலும் அவன் குற்றவாளி என்று தேவன் வெளிப்படுத்தியுள்ளார்.

பழைய ஏற்பாடு, ஆபிரகாமை ஆழ்ந்த விசுவாசமுள்ளவன் என்று வெளிப்படுத்துகிறது. அவன் விசுவாசிகளின் தகப்பன் என்றும், தேவனுடைய சிநேகிதன் என்றும் விவரிக்கப்படுகிறான். இருப்பினும், ஆபிராகம் பார்வோனிடத்திலும் அபிமலேக் ராஜாவிடத்திலும் பொய் சொன்னான் என்று தேவன் சொல்லுகிறார்!

புதிய ஏற்பாட்டில், பேதுரு ஆர்வமும், விசுவாசமும் நிறைந்த ஒரு மனிதன் என்று தேவன் வெளிப்படுத்தியுள்ளார். கர்த்தர் அவனை, அப்போஸ்தலர் நடபடிகளில் வல்லமையான பிரசங்கங்களைச் செய்யும்படியாகவும் இரண்டு புதிய ஏற்பாட்டு நூல்களை எழுதும்படியாகவும் பயன்படுத்தியுள்ளார். இருப்பினும், பேதுரு கிறிஸ்துவை மூன்று தரம் மறுதலித்தார் என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்.

வேதாகமத்தைக் கொடுத்தவர் மனிதனா அல்லது தேவனா ? சந்தேகத்திற்கிடமில்லாமல் அவர் தெய்வீகம் நிறைந்தவரே ! தேவன் **அனைத்து** உண்மைகளையும் சொல்லுகிறார். ஆகவே, வேதாகமம், தேவனுடைய வாயிலிருந்து ஊதப்பட்டு, ஏவப்பட்ட ஒன்றே.

அடுத்தமாதம், வேதாகமம், ஏவப்பட்டு எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தை தான் என்பதை நம்புவதற்கு ஏதுவாக இன்னும் பல காரணங்களை நாம் சோதித்தறிய முடியும் என நம்புகிறோம். நாம் ஒவ்வொருவரும், அவருடைய வார்த்தையாகிய வேதாகமத்தை நமக்குத் தந்ததற்காக அவரைத் துதித்து, நன்றி செலுத்துவோமாக !

EZSR - Charlie Di Palma.


## "திருமறை தியானம்"

தொலைக்காட்சி நிகழ்ச்சியில்

"**திருமறை ஆசான்**" ஆசிரியர் உரையாற்றுகிறார்.

**ராஜ் T.V - பிரதி புதன்கிழமை காலை 6.05 - 6.20**

**தமிழன் T.V - பிரதி செவ்வாய்கிழமை காலை 7.15 - 7.30**

# இரண்டு ஆதாம்கள்

இக்கட்டுரையை வாசிக்கிற யாவருக்கும் பிந்தின ஆதாமாகிய இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தினாலே வாழ்த்துக்கள். நாம் வாழ்கின்ற இந்த உலகத்தில் பாவமும் மரணமும் யார் மூலமாய் வந்தது என்று கேட்டால் நாம் மனபாரத்தோடும் கோபத்தோடும் "ஆதாம்" என்று முணுமுணுப்போம் ஏனென்றால் ஆதாம் அன்று பாவம் செய்யவில்லையென்றால் நாம் இன்று தேவனுடைய சமூகத்தில் மரணம் இல்லாமல் சந்தோஷத்தோடும் களிப்போடும் இருந்திருப்போம். ஆனால் ஆதாம் செய்த பாவத்தின் விளைவாக இன்று மரணம் உலகத்தில் பிரவேசித்து மனுக்குலத்தை பாடாய் படுத்திக் கொண்டிருக்கிறது.

ஆதாமை, நாம் மன அளவில் வெறுத்தாலும் வேத வசனம் அவனைக்குறித்து "அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்" (ரோம 5:14) என்று கூறி நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. முந்தின மனிதனாகிய ஆதாம், பின்பு வந்த ஆதாமாகிய இயேசு கிறிஸ்துக்கு எப்படி முன்னடையாளமானவன் (மாதிரியானவன்) என்பதை இக்கட்டுரையின் மூலம் கற்றுக்கொள்வோம்.

## பிந்தின ஆதாம் வானத்திலிருந்து வந்த கர்த்தர்

முந்தின மனிதனாகிய ஆதாமை தேவன் பூமியின் மண்ணிலிருந்து படைத்தார். வேத வாக்கியமும் "தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார்." (ஆதி 2:7) என்று நமக்கு போதிக்கிறது. ஆதாம் முதல் இன்றைக்கு உலகத்தில் ஜீவிக்கிற எல்லா மனிதர்களின் சரீரமும் மண்ணாகத்தான் இருக்கிறது. அதனால்தான் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது "முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்" (I கொரி 15:47) என்று எழுதுகிறார். மேலும் பவுல் எழுதுகின்றபோது மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே (I கொரி 15:48) என்று கூறுகிறார். ஆனால் பிந்தின ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் பவுலைக் கொண்டு வெளிப்படுத்தும் போது "இரண்டாம் மனுஷர் வானத்திலிருந்து வந்த கர்த்தர் (I கொரி 15:47) என்கிறார்."

நாம் வாழ்ந்து கொண்டு இருக்கும் இந்த சமுதாயத்தில் அநேகர் இயேசு கிறிஸ்துவைக் பற்றிக் கூறும் போது நல்போதனைகளை செய்த ஒரு மனிதர் என்ற ரீதியில் தான் பேசுகின்றனர். ஆனால் வசனம் அவர் மனிதன் அல்ல "கர்த்தர்" என்று தெளிவாக கூறுகிறது. அந்த கர்த்தர்

பரலோகத்தில் இருக்கிற பிதாவுடைய ஒரே குமாரனாய் இருக்கிறார் (யோ 3:16) அந்த குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிற யாவருக்கும் அவர் நித்திய ஜீவனை கொடுக்கிறார். பிந்தின ஆதாம், இரண்டாம் வருகையில் இந்த பூமியை நியாயந்தீர்க்க வரும்போது நாம் நீதிமான்களாக இருப்போமென்றால் இப்பொழுது மண்ணான வனுடைய சாயலை அணிந்திருக்கிறது போலவே அப்பொழுது வானவருடைய சாயலையும் அணிந்து கொள்வோம் (I கொரி 15:49) எனவே முந்தின ஆதாம் பின்பு வந்த பிந்தின ஆதாமுக்கு பிறப்பின் சாயலிலே முன்னடையாளமானவன்.

## பிந்தின ஆதாமின் கீழ்ப்படிதலினாலே நாம் நீதிமானாக்கப்படுகிறோம்.

**"பாவம்"** என்ற இந்த வார்த்தை எங்கே ஆரம்பித்தது என்று கேட்டால் நம்மிடத்திலிருந்து வரக்கூடிய உடனடி பதில் "ஏதேன் தோட்டம்" என்பதாகத்தான் இருக்கும். இவ்வார்த்தை முற்றிலும் உண்மையான வார்த்தை தான் ஏனென்றால் ஏதேன் தோட்டத்தில் தேவன் மனிதனுக்கு விலக்கி வைத்த "நன்மை தீமை" அறியதக்க கனியை அவன்தன் மனைவியோடு சேர்ந்து புசித்த போது பாவத்தை இரண்டுபேரும் சரிசமமாக பகிர்ந்து கொண்டார்கள்.

தேவன் ஆதாமிடம் கொடுத்த கட்டளைக்கு கீழ்ப்படியாததினாலே "பாவம்" ஏதேன் தோட்டத்தில் ஆரம்பித்தது அந்த பாவம் இன்று உலகமெல்லாம் ஆண்டு கொண்டு இருக்கிறது. முந்தின ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே நாம் தேவனோடு இருக்கும் சிலாக்கியத்தை இழந்து போனோம். ஏனென்றால் ஆதாம் பாவம் செய்தபோது தேவனுடைய சமூகத்தில் இருந்து துரத்தப்பட்டான். (ஆதி 3:24) இதைக்குறித்து ஏசாயா தீர்க்கன் சொல்லும்போது உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (ஏசா 59:2) என்கிறார். **நமக்கும் தேவனுக்கும் பிரிவினை** உண்டானது என்றால் அது ஆதாமின் கீழ்ப்படியாமையினாலேதான். அந்த ஆதாமுக் குள்ளாக நாம் எல்லாரும் பாவிகளாக்கப்பட்டோம். ஆனால் பிந்தின ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவைக்குறித்து வேத வசனம் சொல்கின்ற போது "ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்" (ரோம 5:19) என்கிறது. இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தினாலே யாரெல்லாம் கழுவப்படுகிறார்களோ அவர்கள் எல்லாரும் நீதிமான்களாக மாற்றப்படுகிறார்கள். அப்படி நீதிமான்களாக மாற்றப்பட்டவர்கள் "ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கப் பட்டவர்களாக இருக்கிறார்கள்" (எபே 2:16) மீண்டுமாக நாம் தேவனிடத்தில் இணைவதற்கு பிந்தின ஆதாமாகிய கிறிஸ்துவே நமக்கு வழியாய் இருக்கிறார். (யோவா 14:6)

முந்தின ஆதாமின் கீழ்ப்படியாமையினால் நாம் எல்லாரும் பாவிகளாயிருந்தோம். பிந்தின ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினால் நாம் நீதிமான்களாக்கப்பட்டு இருக்கிறோம்.

## பிந்தின ஆதாமுக்குள்ளாக நித்திய ஜீவன் வந்தது

பூமியின் மண்ணிலிருந்து படைக்கப்பட்ட ஆதிமனுஷனாகிய ஆதாம் தன்னுடைய கீழ்ப்படியாமையினாலே பாவத்தையும் அதற்கு ஈவாக மரணத்தையும் பரிசாக இந்த மனுகுலத்திற்கு பெற்று தந்தான். தேவன் அவனுக்கு விலக்கின நன்மை தீமை அறியத்தக்க கனியை அவனும் அவனுடைய மனைவியும் சேர்ந்து புசித்தபடியினால் தேவன் ஆதாமை நோக்கி, நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால் நீ பூமிக்குத் திரும்பும் மட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய். நீ மண்ணாயிருக்கிறாய். மண்ணுக்குத் திரும்புவாய் (ஆதி 3:19) என்று மனுகுலத்திற்கு ஆதாமின் மூலமாய் தேவன் மரணத்தை கொடுத்தார். இதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் ரோமபுரியில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது "ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது (ரோம 5:12) என்று எழுதுகிறார்.

இன்றைக்கு இருக்கக்கூடிய ஒவ்வொரு மனிதனும் மரணத்தை எதிர்நோக்கியே தன்னுடைய வாழ்க்கையை தள்ளிக்கொண்டு இருக்கிறான். மரண பயம் அவனை நாள்தோறும் வாட்டி விதைத்துக் கொண்டு இருக்கிறது. மரண பயத்திலிருந்து மனிதனை விடுதலை பண்ணுவதற்காகத்தான் பிந்தின ஆதாமாகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியிலே பிறந்து, வளர்ந்து தம்மையே ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தார். பரிசுத்த ஆவியானவர் கூறும் போது "ஜீவ காலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும் படிக்கும் அப்படியானார் (எபி 2;14,15") என்று கூறுகிறார். முந்தின ஆதாமினால் உலகத்தில் மரணம் வந்தது. ஆனால் பிந்தின ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவை எந்தவொரு மனிதனும் ஏற்றுக்கொள்ளும் போது அவன் மரண பயத்திலிருந்து விடுதலை பெறுகிறான். அவன் இந்த பூமியில் சரீரத்தில் மரித்தாலும் மறுமையின் நம்பிக்கை அவனுக்கு பிரகாசமாக இருக்கிறது.

தமஸ்கு சாலையில் பரமனை தரிசித்த பவுல் ரோமபுரியருக்கு எழுதும் போது "ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய் மரணம் ஆண்டு கொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து

என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே (ரோம 5:17) என்று கூறுகிறார்." முந்தின மனுஷனாகிய ஆதாமிடமிருந்து இந்த உலகத்திற்கு மரணம் வந்தது. பிந்தின ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து நித்திய ஜீவன் வந்தது.


## பிந்தின ஆதாமுக்கு சபை என்னும் ஒரே மணவாட்டி

முந்தின ஆதாமுக்கு ஏற்ற துணையை உருவாக்க வேண்டும் என்ற தேவன் அவனுக்கு அயர்ந்த நித்திரையை உண்டாக்கி அவனுடைய விலா எலும்பிலிருந்து ஏவாளை உருவாக்கினார். அவளை ஆதாமிடம் தேவன் கொண்டு வந்தபோது அவன் "இவள் என் எலும்பில் எலும்பும் என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்" (ஆதி 2:23) என்றான். ஆதாமுக்கு வேதத்தின் பிரகாரம் பார்க்கிறபோது ஒரு மனைவி மாத்திரமே இருந்ததாகத்தான் பார்க்க முடியும். நாம் வேதாகமத்தில் எந்த பக்கத்தை திருப்பினாலும் ஆதாமுக்கு வேறு மனைவி இருந்ததாக பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தவில்லை.

அதுபோல பிந்தின ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவும் ஒரு மணவாட்டியை உடையவராக இருக்கிறார். அது யாரென்றால் சபையாகிய மணவாட்டியாகும். கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் வாங்கப்பட்டவர்களே மணவாட்டியாக இருக்கிறார்கள் (அப் 20:28) வேத வசனம் கிறிஸ்துவின் சரீரம் (எபே 1:23) என்றே அழைக்கிறது.

அந்த ஒரே சரீரத்திற்கு கிறிஸ்துவே தலையாய் இருக்கிறார் (எபே 1:23, 4:4, 5:23) முந்தின ஆதாமுக்கு எப்படி ஒரு மனைவியோ அதுபோல பிந்தின ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் சபையாகிய ஒரே மணவாட்டிதான். ஆனால் இன்று இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை அநேகர் விட்டு இவர்களாக ஒரு சரீரத்தை (சபை) உண்டு பண்ணி அதை கிறிஸ்துவின் தலைக்கு கீழாக ஒட்டி வைக்கிறார்கள். அதோடு மாத்திரம் நில்லாமல் தங்கள் கற்பனையான உபதேசங்களை போதித்து அநேகரை தங்கள் வலையில் விழ வைக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பின் நாளிலே அதற்கான பலனை அடைவார்கள். வேத வசனங்க்ள் நமக்கு தெளிவாக போதிக்கிறது அதுஎன்னவென்றால் ஒரே சரீரமாகிய சபை என்றும் அதற்கு கிறிஸ்துவே தலை என்றும் கூறுகிறது. அந்த சபை கிறிஸ்துவின் சபை என்றே வேதாகமத்தில் அழைக்கப்படுகிறது. (ரோம 16:16). முந்தின ஆதாம் ஒரே மனைவியை உடைய மணவாளனாயிருந்தான். அதுபோல பிந்தின ஆதாமும் ஒரே மணவாட்டியை (சபையை) உடைய மணவாளனாயிருக்கிறார். ஆகவே பிந்தின ஆதாமை பெற்றுக்கொள்வோம்.

**என். பர்னபாஸ், திருப்பூர்.**



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELGU | Monday<br>to Friday | 5.30-5.45 | Box. 80<br>Kalkinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00 p.m.<br>5.45-6.00 p.m.<br>5.30-5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560<br>084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sansrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghese |

## PLEASE WATCH

### ETC TV

**Every Sunday from 6.00 to 6.30 a.m.**

**for a Christian Programme in Hindi**

Please write to these address for Bible
Correspondence Courses,
Magazines and other Christian Litertures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annual Subscription Rs-30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்
கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட
அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்
விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவச பயிற்சி.**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம்.
தமிழ்நாடு. இந்தியா.

# திருமறை தியானம்




*Published by **CHURCH OF CHRIST**, Kangayam.*
*Printed at **Konar Printers**, Madurai - 625 012. Editor. S. Rajanayagam.*